3. தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு, சாதனைகள், நிறைவேற்றப்பெற்ற திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு பேரவைத் தலைவரின் நன்றியுரை மற்றும் முதலமைச்சரின் ஏற்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் அனைவரின் வாழ்த்துகளோடு ஒரு நிமிடம் நானும் எடுத்துக்கொள்கிறேன். அயர்லாந்தில் பிறந்து, லண்டனில் படித்து, இந்தியாவிற்கு வந்து, இந்தியாவின் தென்கோடியில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள இடையன்குடியில் வாழ்ந்து தமிழ் கற்றார். மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு போன்ற மொழிகளைக் கற்றுத் தேர்ந்து தமிழுக்கு ஒப்பிலக்கணம் தந்தவர் மறைந்த அய்யா கால்டுவெல் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கால்டுவெல் அவர்கள் இத்தனை மொழிகளையும் ஏன் படித்தார் என்று சொன்னால், அந்தக் காலத்தில் Madras Presidency, சென்னை மாகாணம், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, ஒடிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கியது. அந்தப் பகுதிதான் Madras Presidency. அதிலே இத்தனை மொழிகளும் இருந்தன. இத்தனை மொழிகளையும் கற்றுத் தேர்ந்து ஓர் ஒப்பீட்டளவில் ஒப்பிலக்கணம் எழுதி, அதுவரை ஆரிய சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியது தமிழ், மற்ற திராவிட மொழிகள் என்ற மாயையை மாற்றி, சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியது, தென் மாநில மொழிகள் அல்ல, குறிப்பாக, தமிழ் மொழி அல்ல; தமிழ் மொழியிலிருந்து தோன்றியதுதான் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகள். தமிழ் மொழியிலிருந்து தோன்றியவை, ஆகவே, இந்த மொழிகளுக்குப் பெயர்தான் திராவிட மொழி என்று ஒப்பிலக்கணம் தந்தவர் மறைந்த அய்யா கால்டுவெல் அவர்கள். ஆகவேதான், தலைவர் கலைஞர் அவர்கள் கால்டுவெல் அவர்களுக்கு நேப்பியர் பாலத்தைத் தொட்டு அடுத்த முதல் சிலையாக நம்முடைய Beach-ல் வைத்து பெருமை சேர்த்தது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அவர் வாழ்ந்து மறைந்த இல்லத்தை அரசு இல்லமாக அறிவித்து அவருக்கு stamp வெளியிட்டு, அவருக்கு நாணயமும் வெளியிட்ட பெருமை மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களைச் சாரும். அந்த வழியில் வந்த இந்த ஆட்சி திராவிட ஆட்சி என்று சொல்வதற்கு ஓர் ஒப்பிலக்கணம் எப்படி வந்ததோ, சிந்தித்து

இப்படிப்பட்ட நாளில் அதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம் அல்ல; முதல்வருடைய நோக்கமும் அல்ல. கடந்த ஆண்டில் இதே நாளில் முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற அந்த நாள்தான், கால்டுவெல் அவர்களின் 207–வது பிறந்த தினம்.

பிற்பகல் 12–55

இன்று அவருடைய 208-வது பிறந்த நாள். எவ்வளவு ஒற்றுமை என்று பாருங்கள். இது திராவிட குடும்பம்; திராவிட மொழி; ஆகவே, இந்தத் திராவிடத்திற்கு என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. அந்தத் தனிச் சிறப்பைத் தலைநிமிரச் செய்து, இன்று, அந்த 'திராவிட மாடல் ஆட்சி' என்பது இதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உலகுக்குக் காட்டிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நானும், என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓராண்டு காலத்தில் விவசாயக் கடன் இரத்து; விவசாயப் பயிருக்கு வட்டியில்லாக் கடன். 5 பவுனுக்குக் குறைவாக விவசாயி கடன் பெற்றிருந்தால், வட்டி முதலுடன் சேர்த்து, அதைத் திருப்பிக் கொடுக்கின்றார்கள். 15 இலட்சம் சுயஉதவிக் குழுக்களின் கடன்களை இரத்து செய்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, ஏழைகள், பெண்கள், சாதாரணமாக எத்தனை முறை வேண்டுமானாலும், இலவசமாக பேருந்தில் செல்லலாம். இதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

மக்களைத் தேடி மருத்துவம்; அதுமட்டுமல்ல, இன்னுயிர் காப்போம் திட்டம். திடீரென்று விபத்து ஏற்பட்டுவிட்டால் அந்தத் தாய், தந்தையர் அலறுகின்ற சத்தம் நமக்கெல்லாம் கேட்டதோ, கேட்கவில்லையோ, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கேட்டிருக்கின்றது. அவர்களைத் தூக்கிக் கொண்டு எலும்பு முறிவு மருத்துவமனைக்குப் போனால், 50 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும், 1 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டுமென்பார்கள். 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டை 1 இலட்சம் ரூபாய்க்கு அடமானம் வைத்து அல்லது கிரயத்திற்குக் கொடுத்து, பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்வார்கள். அவர்கள் அலறிய அலறல்—இலட்சம் ரூபாயைச் செலுத்தவில்லை

என்றால், மருத்துவமனைக்குள்ளே அனுமதிக்க மாட்டார்கள். அந்தப் பெற்றோர்களின் அலறல் சத்தம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கேட்டது. ஆகவேதான், அவர் இன்னுயிர் காப்போம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார். அதில் 30,000 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் பயன்பெற்றோர் 1 கோடியை நெருங்குகின்றார்கள். வீடுகளுக்குச் சென்று பார்த்தால், எவ்வளவு வேதனையோடு இருக்கின்றார்கள். ஆக, இந்த ஆட்சியை ஒரு வார்த்தையில் சொன்னால், இது ஏழைகளுக்காக நடக்கின்ற ஆட்சி, தமிழகத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்துகின்ற ஓராண்டு ஆட்சி. உங்களுடைய வாழ்த்துகளோடு என்னுடைய வாழ்த்துகளையும் நான் சேர்த்து, இன்னும் 100 ஆண்டு காலம் நோய்நொடி இல்லாமல் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாழ்ந்து, நல்லாட்சியைத் தமிழகத்திற்கு தந்து, தமிழக மக்களை தலைநிமிர வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, வாழ்த்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்று, இரண்டாம் ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கக்கூடிய இந்த நேரத்திலே, தங்களின் அனுமதியோடு விதி 110-ன்கீழ் நான் சில கருத்துக்களை இந்த அவையில் பேசியிருக்கிறேன். அதையொட்டி, தொடர்ந்து நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய பல்வேறு பணிகள் தொடர்பான பல திட்டங்களை அறிவித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி வரிசையிலே, முன்வரிசையிலே உட்கார்ந்திருக்கக்கூடிய நம்முடைய தலைவர்கள், உறுப்பினர்கள் மிகச் சிறப்பான வகையிலே அதனை வரவேற்று எனக்கு வாழ்த்துச் சொல்லி, இந்த அரசுக்குப் பாராட்டைத் தெரிவித்து உரையாற்றியிருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இங்கே வாழ்த்திப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் வாழ்த்தியிருக்கிறார்கள். அப்படி வாழ்த்திய அத்தனை பேருக்கும் நான் இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தை அரசின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த முதலமைச்சர் பதவி என்பது, என்னைப் பொறுத்தவரையில், நான் அடிக்கடி சொல்வதுண்டு. தலைவர் கலைஞர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 'பதவியைப் பதவியாகப் பார்க்காதே–பதவியைப் பொறுப்பாகப் பார்; அப்போதுதான் பொறுப்போடு பணியாற்ற முடியும்' என்று அடிக்கடி எனக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், அதைப் பொறுப்போடு, நான் அதைப் பொறுப்பாகக் கருதி, பொறுப்பை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இடத்திலே முதலமைச்சராக இருந்து, ஆட்சியை நடத்தி, சமுதாயத்திற்காக, இந்த நாட்டிற்காக உழைத்திருக்கக்கூடிய பெருந்தலைவர் காமராசர் அவர்களாக இருந்தாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாக இருந்தாலும், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாக இருந்தாலும், கலைஞர் அவர்களுடைய இனிய நண்பராக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களாக இருந்தாலும், அவர்களெல்லாம் ஆற்றியிருக்கக்கூடிய அந்தப் பணிகளை நான் ஒருக்காலும் மறந்திடமாட்டேன். ஆகவே, அவர்கள் வழிநின்று என்றைக்கும் நான் என்னுடைய கடமையை ஆற்றுவேன்; ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், 'உங்களில் ஒருவனாக' இருந்து என்னுடைய கடமையை ஆற்றுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வாழ்த்திய அத்தனை பேருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி, நன்றி, நன்றி!

பிற்பகல் 1–00

4. தகவல் கோரல்

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஏ.வி.எம். கால்வாய், தூர்வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி, வணங்குகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வழிப் போக்குவரத்தாகப் பயன்பட்டுவந்த பூவாரம் முதல் நீரோடித்துறை, இறையுமன்துறை, தேங்காய்பட்டணம், தொட்டில்பாடு, சைமன்காலனி, மண்டைக்காடுபுதூர் வரை சுமார் 27 கி.மீ.